**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். :188/2024**

**நாள்: 16.07.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 9 (LW 2)

2025 ம் ஆண்டு ஜூலை திங்கள் 16 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அய்யம்பெருமாள் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி ஆஜர்)

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது கூத்தன்வயல் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 காளீஸ்வரி என் மனைவி. இறந்து போன முனியசாமி என்பவர் என் மைத்துனன் ஆவார். ஆஜர் எதிரி என் சித்தப்பாவின் மகள். கடந்த 2023 ஆம் ஆண்டு மாதம் நினைவில்லை ஒருநாள் இரவு சுமார் 10 முதல் 11 மணி இருக்கும், வாகவயல் கிராமத்தை சேர்ந்த ஜான்சன் என்பவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது மைத்துனன்

முனியசாமியை குடும்ப சண்டையில் அவரது மனைவி அடித்ததால் சீரியசாக வீட்டில் இருப்பதாக சொன்னார். நானும் என் மனைவியும் இரு சக்கர வாகனத்தில் என் மைத்துனரின் வீட்டிற்கு சென்று பார்த்தோம். அப்போது முனியசாமிக்கு பின்னந்தலையில் ரத்த காயத்துடன் அவரது வீட்டினுள்ளே கிடந்தார். அப்போது அவரது வீட்டில் அவரது மனைவி சுமதி மற்றும் 2 மகன்கள் ஆகியோர் இருந்தனர். மைத்துனர் முனியசாமி மிகவும் சீரியசாக இருந்தார். கிராமத்தார்கள் ஆம்புலன்சிற்கு சொல்லி இருந்த ஆம்புலன்ஸ் வந்த உடன் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். மருத்துவர் முனியசாமியை பரிசோதித்து பார்த்து அவர் இறந்துவிட்டதாக சொன்னார். பின்னர் என் மனைவி திருபாலைக்குடி போலீசில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

கூத்தன்வயலுக்கும் வாகவயலுக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 15 கி.மீ இருக்கும். கூத்தன்வயலில் இருந்து வாகவயல் வர வேண்டும் என்றால் R.S. மங்களம் வந்து பின்னர் திருபாலைக்குடி வந்து பின்னர் வாகவயல் செல்ல வேண்டும் என்றால் சரிதான். மேற்படி இடங்களுக்கு உள்ள தூரம் 40 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். என் மைத்துனன் முனியசாமி மது பழக்கத்திற்கு அடிமையானவர் என்று சொன்னால் சரிதான். குடித்துவிட்டு அவர் பல இடங்களுக்கு சென்று தகராறு செய்வது வழக்கம். வேலைக்கு செல்வது இல்லை என்றால் சரிதான். அதனால் சுமதி தன் கணவரை வீட்டில் சேர்க்காமல் தனியாக ஒதுக்ககி வைத்திருந்தார் என்றால் சரிதான். நான்கு ஐந்து வருடங்களாக முனியசாமியை வீட்டில் சேர்க்காமல் தனியாக இருந்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு முனியசாமி இறந்த தகவல் கிடைத்தவுடன் நானும்

என் மனைவியும் நேராக இராமநாதமபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் முதலில் வீட்டிற்கு சென்று அங்கிருந்து மருத்துவமனைக்கு சென்றோம். 19.11.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு தான் திருப்பாலைக்குடி காவல் நிலையத்திற்கு சென்றோம். நாங்கள் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது ஊர்க்காரர்கள் யாரும் இல்லை. உயிரை காப்பாற்றுவதற்காக என் மைத்துனன் முனியசாமியை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவமனைக்கு சென்றவுடன் முனியசாமியை பார்த்து மருத்துவர் என்ன நடந்தது என்று கேட்டார் நானும் என் மனைவியும் நடந்த விசயத்தை சொன்னோம். மருத்துவர் எழுதிக் கொண்டார். மருத்துவமனைக்கு சென்ற போது இரவு 12.00 மணி இருக்கும். அது 18.11.2023 ஆம் தேதி இரவு 12.00 மணி இருக்கும். அப்பொழுது மருத்துவமனையில் இருந்த போலீசார் வந்து என்ன ஏது என்று விசாரித்து எழுதிக் கொண்டார்கள். எனக்கு தகவல் போன் மூலம் தான் சொன்னார்கள். அந்த போன் யார் செய்தது, அவரது தொலைபேசி எண் என்ன ஆகிய விவரங்கள் எனக்கு தெரியாது. என் மனைவிக்கு தனியாக தொலைபேசி இல்லை எனக்குத்தான் தகவல் வந்தது. நான் சொன்னது போல் எனக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றாலும், அதன் பெயரில் நான் சுமதி வீட்டிற்கு சென்றதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. நான் சுமதி வீட்டில் இருந்து என் மைத்துனரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மைத்துனன் முனியசாமி குடி போதையில் தகராறு செய்து அடிபட்டு எங்கோ இறந்து கிடந்தவரை போலீசார் தான் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், பின்னர் எங்களை சாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக புகார் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மைத்துனன் முனியசாமிக்கு நாங்கள் தான் பென் பார்த்து எதிரிக்கு திருமணம் செய்து வைத்தோம். அவர் மது பழக்கம்

கொண்டவர் என தெரிந்து தான் திருமணம் செய்து வைத்தோம். அதனால் எதிரி சுமதி எங்களுடன் பேச்சு வார்த்தையில் இல்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :</u>

இல்லை.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .